**ஹபராதுவ பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹபராதுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன ் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹபராதுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் 4 சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல். வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,

புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில ் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன ் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைக்கப் பெற்ற கழிவு முறையே ரூபா 1,475,000 தொகை மற்றும் ரூபா 225,112 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்த போது ரூபா 184,614 இற்கான கழிவு திரண்ட நிதியத்திற்கு மற்றும் ஏனைய வருமானக் கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளுக்கும் செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 184,614 தொகையினால் அதிகரித்திருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மொத்த இறுதி இருப்பு மீதியின் பெறுமதி ரூபா 151,802 மூலதன கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 4,673,931 தொகை குறைவாகவும் செலவுகள் ரூபா 23,073,552 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் வாகனப் பராமரிப்பு அலகுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 441,868 பெறுமதியான 16 இயந்திர உபகரணங்கள் மற்றும் ரூபா 3,419,000 தொகை பெறுமதியான டிரக்டர் வண்டி மூலதனப்படுத்தப்பட்டு இருக்காததுடன் வாகன பராமரிப்பு செலவாகிய ரூபா 367,494 தொகை இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டின் செலவு கடன்கொடுத்தோருக்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காமையால் மீளாய்வாண்டில் சரி செய்யும் போது ரூபா 186,220 தொகை செலவுக் கடன்கொடுத்தோர் மிகையாகவும் திரண்ட நிதியம் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான பெறுமதியில் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கடன்கொடுத்தோருக்காக ரூபா 3,884,187 தொகை குறைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான பெறுமதியில் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (எ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண கணக்குகளின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை மற்றும் உதவிகள் மூலம் பங்களிப்பு செய்தல் மீதியிடையே ரூபா 184,615 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகளின் மீதிகள் சமமாக இருக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 11 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 14,670,306 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | மீதிகளிடையேயுள்ள வித்தியாசங்கள் தீர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகள் மற்றும் அட்டவணைகளிடையே காணப்படும் சமமின்மைகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட ரூபா 7,090 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை தீர்த்திருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தொங்கள் கணக்குகளின் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுதொகை ரூபா 52,928,885 இற்கான 22 கணக்கு மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | சரியான அட்டவணைகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 24 | 2010 ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத பாதைகள் அனைத்தும் விரைவாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | i. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 316 மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் விதி 19 | அடியிதழ் புத்தகங்கள் மற்றும் நிதிப் பெறுமதியுடைய ஏனைய படிவங்கள் பாதுகாப்பாக செயலாளரின் பொறுப்பில் காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 3,966,990 தொகை பெறுமதியான 76949 பற்றுச் சீட்டு புத்தகங்கள் மற்றும் 7850 பற்றுச் சீட்டுகள் மற்றும் உப பற்றுச் சீட்டுகள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் மற்றும் உப பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் தனியாக பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டது என. | நிதிசார் பெறுமதியை உடைய புத்தகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii. நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்டு இரண்டு வருட காலத்தை மிகைத்திருந்த 10 சதவீத தடுத்து வைத்தல் ரூபா 487,810 தொகை சபையின் வருமானத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய 2020/01 இலக்கங் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரிவு 05 | உடன்படிக்கைள் காலவதியாகிய 39 கடையறைகள் காணப்பட்டதுடன், உடன்படிக்கைகளை புதுப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாத கடையறைகளை சீல் வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடையறை உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக சபையின் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், எரிபொருளுக்காக ரூபா 296,968 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தொகுதி வாகன வசதிகள் வழங்குவதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் இந்த அலுவலகத்தில் காணப்படவில்லை என. | கிரயம் குறைவாகக் கூடியவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 39,723,912 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 68,083,412 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 19,025,000 | 18,919,067 | 19,673,584 | 31,249,409 | 17,530,298 | 17,117,787 | 13,581,262 | 32,003,926 |
| வாடகை | 5,873,000 | 2,593,077 | 1,631,732 | 5,041,325 | 7,225,500 | 8,225,721 | 5,887,922 | 4,079,980 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 10,000,000 | 9,489,752 | 9,516,052 | 30,400 | 12,126,190 | 9,055,168 | 9,064,668 | 56,700 |
| ஏனைய வருமானங்கள் | 19,415,000 | 30,882,385 | 30,882,385 | 522,822 | 10,800,500 | 83,226,398 | 83,226,398 | 522,822 |
| | 54,313,000 | 61,884,281 | 61,703,753 | 36,843,956 | 47,682,488 | 117,625,074 | 111,760,250 | 36,663,428 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 36,663,428 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 36,843,956 தொகையாக இருந்தது. | அறவிட வேண்டிய மொத்த வருமானத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 31,170,219 இற்கான நிலுவை வீதவரி மீதியில் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 4,080,228 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. தலைமை அலுவலகத்தை சேர்ந்த அதிகாரப் பிரதேசத்தில் 6845 வீதவரி ஆதனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 4921 ஆதனங்களுக்காக எதுவித வரித் தொகையும் செலுத்தியிருக்காததுடன் அந்த ஆதனங்களில் இருந்து ரூபா 13,969,998 இற்கான வரித் தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை குத்தகை வருமானம் ரூபா 4,079,980 காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 5,041,325 தொகையாக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானத்தையும் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | ஜோவி சிற்றுண்டிச்சாலைக்காக 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 98,256 இற்கான நிலுவை வாடகைத் தொகை தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீண்டகாலமாக நிலுவையாக காணப்படும் மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது குறிப்பிட்ட உடன்படிக்கையில் பிரிவு 3 இற்கு இணங்க 85 கடையறைகளில் இருந்து அறவிடப்படாமல் காணப்பட்ட நிலுவை பாதுகாப்பு பிணைத் தொகை ரூபா 1,534,200 தொகை காணப்பட்டதுடன் அந்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிணைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 169 விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 1,272,795 இற்கான கட்டணமொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டிற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | அறிவித்தல் பலகைகளில் இருந்து குறித்த கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பை வரி அறவீடு செய்வதற்காக பதிவு செய்யப்பட்டிருந்த 126 நிறுவனங்களில் 61 நிறுவனங்களிலிருந்து ரூபா 1,854,275 இற்கான நிலுவை வருமானமொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அதனை அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக நிலுவை குப்பை வரி அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை குப்பை கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான சுதந்திர வர்த்தக வலய பூங்கா மற்றும் ஜோவி பூங்கா 2018 ஆண்டில் இருந்து செயற்படாமையால் அது தொடர்பாக அச்சிடப்பட்டிருந்த ரூபா 3,966,990 பெறுமதியான 7850 டிக்கெட் புத்தகங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலைகள் பூர்த்தி செய்த பின்னர் டிக்கெட் பத்திரங்களை பயன்படுத்தி வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலைகளை விரைவாக மேற்கொண்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132 இற்கு இணங்க இணக்கமில்லாதவாறு வெளி மாகாணங்களின் காணிப் பதிவு அலுவலகங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 24,679,520 இற்கான முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக சபையின் செயலாளர் உட்பட 07 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு என சபை நிதியத்தில் இருந்து 08 சந்தர்ப்பங்களில் ரூபா 740,386 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் மாதாந்த பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | செலவுகளை குறைக்கக் கூடியவாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 இன் கீழ் சாட்டப்பட்டிருந்த அதிகாரத்திற்கு இணங்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற விடுதிகள்/ சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள் மற்றும் பேக்கரிகள் 447 தொடர்பாக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படாமையால் ரூபா 1,788,000 இற்கான வருமானமொன்றை இழந்துள்ளது. | தற்போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 02 வாகனங்களை உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வாகனங்களின் உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (ஆ) விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கிரயத்தை இனங்காண முடியாத 04 டிரக்டர் டேலர்களின் தட்டு உக்கியிருந்ததனால் அதனை திருத்த வேலை மேற்கொள்ளப்படாமையால் 04 வருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | விரைவாக திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும். |
| (ii) | 2015 ஆண்டு முதல் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்திருந்த பொடொன் க்ரூ கப் வாகனத்தின் முகப் பக்கம் மற்றும் உடம்பு புதிதாக வைக்க வேண்டியிருந்தமையால் அதன் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமையால் 3 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொக்கல முன்பள்ளி மறுசீரமைப்பு மற்றும் வர்ணம் தீட்டும் நிர்மாண வேலையின் மதிலை சாந்து பூசுவதற்காக மற்றும் உதைச்சுவர் செப்பனிடுவதற்காக ரூபா 81,833 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சங்கத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | கொக்கல சந்தை கட்டிடத்தின் மறுசீரமைப்பு நிர்மாண வேலைக்காக உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 63,742 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சங்கத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் சேவையை விட்டுச் சென்றிருந்த, வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த மற்றும் ஓய்வுபெற்றிருந்த 13 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 2,347,905 தொகையாக காணப்பட்டதுடன் அந்த கடன் மீதியை அறவீடு செய்வதற்காக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இந்த நிலுவை மீதியை தீர்க்கும் படி இறுதி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |